**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR**

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.53/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

DW-1

Deposition of witness for Defence

Court

Name : திரு. ராஜாமணி (HDFC Bank Manager)

Father's Name :

Village :

Taluk :

Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 மனுவானது இணையவழியாக பதிவேற்றம் செய்யப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

19.02.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்பொழுது திருநெல்வேலி HDFC வங்கியின் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் மூலம் சாட்சி சொல்ல வந்துள்ளேன். லட்சுமிபதியின் வங்கி கணக்குகள் சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துந்துள்ளேன். 24.09.2019 ம் தேதியில் லட்சுமிபதியின் வங்கி கணக்கில் ரூ.பத்துலட்சம் வரவு வைக்கப்பட்டுள்ளதா என்றால் வரவு வைக்கப்படவில்லை. அதற்குரிய ஆவணத்தை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வந்துள்ளேன். மேற்படி ஆவணமானது **எ.மா.சா.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் HDFC வங்கியில் எத்தனை ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன் என்றால் 9 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். காசோலையானது ஏழாயிரம்பண்ணை தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் வசூலுக்காக போடப்பட்டதா என்றால் 24.09.2019 ம்தேதியில் எந்த காசோலையும் வசூலுக்காக போடப்படவில்லை. 2019 ம் வருடம் ஜனவரியில் முதல் டிசம்பர் வரையிலான வங்கி பரிவர்த்தனை குறித்த சங்கதிகள் எ.ம.சா.ஆ.2 இடம்பெறவில்லை என்றால் இடம்பெறவில்லை. லட்சுமிபதி எந்த தேதியில் எங்களது வங்கியில்கணக்கை ஆரம்பித்தார் என்று எ.ம.சா.ஆ.2 குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் 26.07.2018 ம் ஆண்டில்வங்கிகணக்கு தொடங்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

எ.ம.சா.ஆ.2 ல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு தேதிகளில் 23.09.2019 ல் 13,800, 19,600 செலவிடப்பட்டு, மீதம் கையிருப்பு 44,736.24 உள்ளதாகவும், 24.09.2019 ல் ரூ.20,000 மற்றும் 13,000 செலவிடப்பட்டு மீதம் ரூ.11,736.24 உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 காசோலையானது எங்களது வங்கியால் லட்சுமிபதிக்கு வழங்கப்பட்டதா என்றால் சரிதான். காசோலைக்குரிய தொகையானது இருப்பில் இல்லாத காரணத்தினால் வசூலாகாமல் திருப்பப்பட்டுள்ளதென்றால் Clearing போகவில்லை (அதாவது தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கிக்கு Clearing க்கு செல்லப்பட்டிருந்தால் அந்த வங்கியின் சீலானது தென்பட்டிருக்கும், வங்கி மேலாளர் இணைய வழியில் இது குறித்து பரிசீலணை செய்து பார்த்ததில் 27.04.2022 ம் தேதி Clearing போடப்பட்டு Return ஆகியுள்ளதாக சாட்சி தெரிவிக்கிறார்)

மேற்படி Return ஆன காரணம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் காரணம் குறிப்பிடப்படவில்லை, ஆனால் பணம் அன்றையதேதியில் வங்கி கணக்கில் இல்லை. 27.04.2022 க்குரிய வங்கி கணக்கினை இன்றைக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.2 ஆனது தேவையில்லாத ஆவணம் என்றால் சரியல்ல.